# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

# செய்தி மடல்

செய்தி 14 மடல் 5 மே – 2014 ₹1.00


## 12ஆவது ஐந்தாண்டுத் திட்ட வழிமுறைகள் மற்றும் வடிவமைப்பிற்கான பயிலரங்கம்



பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயக்குநரகம்மூலம் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் 12ஆவது ஐந்தாண்டுத் திட்ட வழிமுறைகள் மற்றும் மாநிலத் திட்ட வடிவமைப்பிற்கான பயிலரங்கம் 04.04.2014அன்று சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது. தமிழ்நாடு கால்நடைமருத்துவஅறிவியல்பல்கலைக்கழகத்துணைவேந்தர் (பொ.) மற்றும் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்பு, பால் மற்றும் மீன்வளத் துறைச் செயலர் முனைவர் எஸ். விஜயகுமார் இ.ஆ.ப., அவர்கள் துவக்கவுரை ஆற்றிப் பயிலரங்கின் நோக்கம் குறித்துக் குறிப்பிட்டார். ஆவின் மேலாண்மை இயக்குநர் திரு. சுனில் பாலிவால் இ.ஆ.ப., அவர்கள் சிறப்புரை ஆற்றினார். பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் கா. குமணன் அவர்கள் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் வழிமுறைகள் மற்றும் மாநிலத் திட்ட வடிவமைப்பு குறித்து எடுத்துரைத்தார். கால்நடை மற்றும் பால்வளத்துறை வல்லுநர்கள் பங்கேற்ற கலந்துரையாடல், பல்கலைக்கழகக் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ம. பாபு அவர்கள் தலைமையிலும், மீன்வளத் துறை வல்லுநர்கள் பங்கேற்ற கலந்துரையாடல், தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் ஜி. ஜெயசேகரன் அவர்கள் தலைமையிலும் நடைபெற்றன. மாவட்ட மற்றும் மாநில வேளாண் திட்டங்களைத் தயாரிக்கிறபோது கால்நடை மற்றும் வேளாண்மைத் துறைத் திட்டத்தில் முக்கியமாக எதிர்கொள்ள வேண்டிய பிரச்சனைகள் முன்னிலைப்படுத்தப்படும்.

## வர்த்தக ரீதியிலான வெண்பன்றி வளர்ப்புப் பயிலரங்கம்




பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணையும், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை வணிக மேலாண்மைத் துறையும் இணைந்து "வர்த்தக ரீதியிலான வெண்பன்றி வளர்ப்பு" குறித்த ஒரு நாள் பயிலரங்கை 29.04.2014 அன்று நடத்தின. பல்கலைக்கழகத் துணைவேந்தர்(பொ.) மற்றும் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துப் பயிற்சிக் கையேடு வெளியிட்டார். பல்கலைக்கழகக் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ம. பாபு அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் தே. தியாகராஜன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ் அவர்கள் பயிலரங்கம் பற்றி விவரித்தார். நிறைவு விழாவில் கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவக்குமார் அவர்கள் பண்ணையாளர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினார். தமிழகம் முழுவதுமாக வெண்பன்றி வளர்க்கும் மற்றும் வெண்பன்றி இறைச்சிக்கடை மற்றும் உணவகங்கள் நடத்தும் 31 பண்ணையாளர்கள் மற்றும் தொழில் முனைவோர் பயிலரங்கில் கலந்து கொண்டனர்.

## புரிந்துணர்வு ஒப்பந்தம்



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கும், சென்னையிலுள்ள கே.ஜே. ஆராய்ச்சி நிறுவனம், கே.ஜே.மருத்துவமனை, ஆராய்ச்சி

மற்றும் முதுகலை மையத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் 16.04.2014அன்று கையெழுத்திடப்பட்டது. உயிர்த்தொழில்நுட்பவியல் துறையில் முனைவர் மற்றும் முதுமுனைவர் பட்ட ஆராய்ச்சித் திட்டங்களில் இணைந்து பணியாற்றவும், தேசிய அளவிலான முக்கியத் திட்டங்களில் பரஸ்பர ஒத்துழைப்புடன் செயல்படவும் இந்த ஒப்பந்தம் வழிவகுக்கும். பல்கலைக்கழகத் துணைவேந்தர் (பொ.) மற்றும் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையில், பல்கலைக்கழகத்தின் சார்பில் ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் கா. குமணன் அவர்களும், கே.ஜே.ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் அதன் இயக்குநர் மற்றும் நிறுவனருமான டாக்டர் கே. ஜெகதீசன் அவர்களும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டனர். கே.ஜே. ஆராய்ச்சி நிறுவனம், ஒவ்வொரு ஆண்டும் நமது பல்கலைக்கழகத்தில் எம்.ஃபில் (உயிர்த்தொழில்நுட்பவியல்) முதலாம் ஆண்டு பயிலத் தேர்வு செய்யப்பட்ட மாணவர் ஒருவருக்கு உதவித்தொகை வழங்கிட ஒப்புக்கொண்டுள்ளது.

## பாவேந்தர் பாரதிதாசன் விழா–2014




பாவேந்தர் பாரதிதாசன் விழா 29.04.2014அன்று சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் கொண்டாடப்பட்டது. விழாவில் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளைச் சார்ந்த மாணவர்களுக்காகப் பேச்சு, கவிதை மற்றும் கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டன. பல்கலைக்கழகத் துணைவேந்தர் (பொ.) மற்றும் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்து உரையாற்றினார். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையின் இணைப் பேராசிரியர் முனைவர் ய. மணிகண்டன் அவர்கள் சிறப்புரை ஆற்றி, போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சொ.ரா. சீனிவாசன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை ஊட்டச்சத்தியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் வி. பாலகிருஷ்ணன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்கள் செல்வி டி.எம். கனிமொழி, செல்வன் ஞா. சரவணன் மற்றும் செல்வன் ம. முல்லைவேந்தன், திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்கள் செல்வி ம. லாவண்யா மற்றும் செல்வன் வி. முரளி, கோடுவெளி உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் செல்வன் ஆர். நவரசம், ஒசூர் கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி மாணவர் செல்வன் க. கவிவேந்தன், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவி செல்வி கோ. சண்முகப்பிரியா ஆகியோர் போட்டிகளில் வெற்றிபெற்றனர்.

## பல்கலைக்கழகப் பதிவாளர் பார்வையிடல்

பல்கலைக்கழகத் துணைவேந்தர் (பொ.) மற்றும் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் திருநெல்வேலி மற்றும் ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களை முறையே 21.04.2014 மற்றும் 22.04.2014ஆம் தேதிகளில் பார்வையிட்டு, இரு கல்லூரி வளாகங்களிலும் கட்டப்பட்டு வரும் புதிய கட்டடங்களை ஆய்வு செய்தார். இரு கல்லூரிகளின் முதல்வர்கள் முறையே முனைவர் சே. பிரதாபன் மற்றும் முனைவர் சி. வீரபாண்டியன் ஆகியோர் தத்தமது கல்லூரிகளின் செயல்பாடுகளைப் பதிவாளருக்கு எடுத்துரைத்தனர்.

## கல்வி நிலையப் பணிகள்

## சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி

### தேசியப் பயிற்சி

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உயிர்த்தொழில்நுட்பத் துறையின் மைய இளங்கரு உயிர்த்தொழில்நுட்பப் பிரிவில் “ஆய்வகச் சோதனை முறைக் கருத்தரித்தல் மற்றும் இளங்கரு வளர்ப்பு” குறித்த தேசியப் பயிற்சி 26.02.2014முதல் 18.03.2014வரை நடத்தப்பட்டது. மருத்துவத் துறைசார்ந்த 10 பேர் உட்பட 19 பேர் பயிற்சியில் பங்கேற்றனர். செயல்முறைப் பயிற்சியோடு சென்னை ஆன்ட்ராலஜி ஆராய்ச்சி மையத்தின் டாக்டர் ஆர். ஜெயந்தி, கற்பக ரக்ஷாம்பிகை கருவாக்க மையத்தின் டாக்டர் பிரியா கண்ணன், சென்னை ஜி.ஜி. மருத்துவமனையின் இணை இயக்குநர் டாக்டர் கமலா செல்வராஜ் ஆகியோரின் விரிவுரைகளும் இடம்பெற்றன. 18.03.2014அன்று நடைபெற்ற நிறைவு விழாவில் பயிற்சி இயக்குநர் முனைவர் ஏ. பழனிச்சாமி அவர்கள் பயிற்சி அறிக்கை அளித்தார். சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சொ. ரா. சீனிவாசன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் சான்றிதழ்கள் வழங்கித் தலைமையுரை ஆற்றினார்.

### கால்நடை மருத்துவத் தொடர் கல்வி

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை ஈனியல் மற்றும் இனப்பெருக்கவியல் துறைமூலம் கால்நடை மருத்துவத் தொடர்கல்வித் திட்டத்தின்கீழ் கேரளக் கால்நடைப் பராமரிப்புத் துறைசார்ந்த 10 கால்நடை மருத்துவர்களுக்காக “நாய்களில் இனப்பெருக்க மேலாண்மை மற்றும் செயற்கைமுறைக் கருவூட்டலில் நவீன உத்திகள்” குறித்த பயிற்சி 21.04.2014முதல் 25.04.2014வரை அளிக்கப்பட்டது. நாய் இனங்கள் மற்றும் நாய்களில் செயற்கைமுறைக் கருவூட்டல் குறித்த



விரிவுரைகள், செய்முறைகள் மற்றும் செயல்முறைப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் உரையாற்றிப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கினார்.

### கால்நடை வளர்ப்போரைச் சமூக – உளவியல் சார்ந்து அணுகுதல் மற்றும் தற்போதைய மாறிவரும் சமூகச் சூழலில் கால்நடை மருத்துவரின் பங்கு



“கால்நடை வளர்ப்போரைச் சமூக – உளவியல் சார்ந்து அணுகுதல் மற்றும் தற்போதைய மாறிவரும் சமூகச் சூழலில் கால்நடை மருத்துவரின் பங்கு” என்ற தலைப்பில் கால்நடை மருத்துவ மாணவர்களுக்கான ஒரு நாள் சிந்தனையரங்கம் 04.04.2014 அன்று சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, கால்நடை விரிவாக்கக் கல்வி மற்றும் தொழில் முனைவோர் துறையினரால் நடத்தப்பட்டது. சிந்தனையரங்கைப் பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் சி. சந்திரகாசன் அவர்கள் துவக்கிவைத்து, சுயதொழில் புரியும் கால்நடை மருத்துவர்களுக்குரிய சமூகப் பொறுப்புகள் குறித்துச் சிறப்புரையாற்றினார். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் 127 இளநிலைப் பட்ட மாணவர்கள் மற்றும் 5 ஆராய்ச்சி மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். கால்நடை விரிவாக்கக் கல்வி மற்றும் தொழில் முனைவோர் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பெரு. மதியழகன் அவர்கள் கால்நடை வளர்ப்போரைச் சமூக– உளவியல் சார்ந்து அணுகுதல் குறித்து விரிவாக விளக்கிக் கூறினார்.

## விரிவாக்கப் பணி

### செயல்திறன் மேம்பாடு மற்றும் சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகள்

பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்ககம்மூலம் கறவைமாடு வளர்ப்பு, வெள்ளாடு வளர்ப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு, கோழிப் பண்ணை மேற்பார்வையாளர் குறித்த செயல்திறன் மேம்பாடு மற்றும் சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகள், தேனி உழவர் பயிற்சி மையம்; விழுப்புரம், மேல்மருவத்தூர், சேலம், ராஜபாளையம் மற்றும் திருவண்ணாமலை, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள், தலைவாசல் கோழியின நோய் ஆய்வகம், மாதவரம் கோழியின ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றில் ஏப்ரல் 2014இல் நடத்தப்பட்டன. பயிற்சிகளில் 18 பேர் பதிவுசெய்து, பயிற்சியைச் சிறப்பாக நிறைவுசெய்தனர்.

மதுரை கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் ஏப்ரல் 2014இல் வெள்ளாடு வளர்ப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு, ஜப்பானியக் காடை வளர்ப்பு, கறவைமாடு வளர்ப்பு, வெண்பன்றி வளர்ப்பு, முயல் வளர்ப்பு, தீவன ஆலை மேற்பார்வையாளர் குறித்த செயல்திறன் மேம்பாடு மற்றும் சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகளில் 62பேர் பதிவுசெய்தனர்.

### தொழில்நுட்பக் கூட்டம்



கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் கரூர் மாவட்டத்தைச் சார்ந்த களப்பணிக் கால்நடைமருத்துவர்களுக்காக “மரபுசார் மூலிகை மருத்துவ முறைகள்” குறித்த தொழில்நுட்பக் கூட்டத்தினை 28.04.2014அன்று நடத்தியது. இதில் தஞ்சாவூர் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ந. புண்ணியமூர்த்தி அவர்கள் கலந்துகொண்டு தொழில்நுட்ப உரையாற்றி, கால்நடை மருத்துவர்களுடன் கலந்துரையாடினார். மொத்தம் 42 கால்நடை மருத்துவர்கள் பங்கேற்றனர்.

### பொய்கைச் சந்தை பார்வையிடல்




வேலூர் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைப் பராமரிப்புப் பொருளியல் துறையுடன் இணைந்து, மூன்றாம் ஆண்டு பயிலும் இளநிலைக் கால்நடை மருத்துவ மாணவர்களை 08.04.2014அன்று பொய்கைச்

Posted on 23.05.2014 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 21.05.2014

Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/12-14
Registration No.TN/TBM/32/2012-14

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.
Printed and Published by
Dr. D. Thyagarajan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Printing Press, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051
**Editor : Dr. D. Thyagarajan, M.V.Sc., Ph.D.,** **Phone : 044-2555 4411**
**E-mail : dde@tanuvas.org.in**

சந்தையைப் பார்வையிட ஏற்பாடு செய்தது. இதில் பங்கேற்ற மொத்தம் 140 மாணவர்கள், கால்நடை உரிமையாளர்களுடன் கலந்துரையாடி, சந்தை தொடர்பான பல்வேறு விவரங்களைச் சேகரித்தனர்.

### பயிற்சி

★ வேலூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், தண்டலம், யோக சேம அறக்கட்டளையுடன் இணைந்து, மதிப்புக்கூட்டிய பால் பொருட்கள் தயாரித்தல் குறித்த புற வளாகப் பயிற்சியினை 28.04.2014அன்று நடத்தியது. பயிற்சியில் மொத்தம் 12 பெண்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர். பாலிலிருந்து மதிப்புக்கூட்டிய பொருட்களான பால்கோவா, பன்னீர், குளோப்ஜாமூன், ரசகுல்லா, நறுமணப்பால் போன்ற பொருட்கள் தயாரித்தல் பற்றிய செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு அறக்கட்டளைத் தலைவர் திருமதி ராதிகா பார்த்தசாரதி அவர்கள் தலைமை வகித்தார். மைய உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ச. சரஸ்வதி அவர்கள் பயற்சியினை நடத்தினார்.

★ தருமபுரி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சிமூலம் ஆடு வளர்ப்பு மற்றும் கறவைமாடு வளர்ப்பு குறித்த பயிற்சி, மாதேஅள்ளி, சிக்கமாரண்டஅள்ளி மற்றும் பறையபட்டிப் புதூர் கிராமங்களைச் சார்ந்த புதுவாழ்வுத் திட்டப் பயனாளிகளுக்காக 07.04.2014முதல் 10.04.2014வரை நடத்தப்பட்டது. மொத்தம் 53 சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயன்பெற்றனர்.

### பணி ஓய்வு



சாந்திநல்லா, செம்மறியாடு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையத்தின் திறனறி பணியாளர் திரு. பி. ராமர் அவர்கள் 30.04.2014அன்று பணி ஓய்வு பெற்றார். 13.04.1954இல் பிறந்த இவர், 38 ஆண்டும் 05 மாதமும் பணியாற்றியுள்ளார்.



ராஜபாளையம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் உடனாள் (தேர்வு நிலை) திரு. கே. கடற்கரை அவர்கள் 30.04.2014அன்று பணி ஓய்வு பெற்றார். 08.04.1956இல் பிறந்த இவர், 28 ஆண்டும் 01 மாதமும் பணியாற்றியுள்ளார்.

## பல்கலைக்கழக முன்னாள் மாணவர்களுக்கு வேண்டுகோள்

தெற்கு ஆசியாவில் முதல் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகமாக, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் செப்டம்பர் 20, 1989இல் துவக்கப்பட்டது. 25 ஆண்டு காலமாகக் கால்நடைப் பண்ணையாளர்களுக்கு ஈடிணையில்லாத சேவையாற்றிவரும் இப்பல்கலைக்கழகம், கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளில் முதன்மை பெற்றிருப்பதோடு மட்டுமல்லாது பல சாதனைகளையும் படைத்திருக்கிறது. கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத்தில் இப்பல்கலைக்கழகத்தின் சிறப்பான செயல்பாட்டை அங்கீகரிக்கும் வகையில், கால்நடை மருத்துவம் மற்றும் மீன்வள அறிவியல் உள்ளிட்ட வேளாண்மைப் புலத்தில் வழங்கப்படும் நாட்டிலேயே உயரிய விருதான “சர்தார் படேல் சிறந்த இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக விருது–2011” பல்கலைக்கழகத்திற்கு அளித்துச் சிறப்பிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா ஆண்டு வெகுசிறப்பாகக் கொண்டாடத் தீர்மானிக்கப்பட்டு, அதையொட்டி மூன்று தளங்கள், ஒவ்வொரு தளத்திலும் ஐந்து அறைகள் என மொத்தம் 6,600 சதுர அடிப் பரப்பு கொண்ட பல்கலைக்கழக முன்னாள் மாணவர் தங்கும் விடுதி நிதியுதவிமூலம் கட்டப்பட உள்ளது. ஒரு சதுர அடிக்கு ரூபாய் 2,000/– என இக்கட்டடத்திற்கான தோராய மதிப்பு ரூபாய் 1.2 கோடியாகும். இவ்விடுதியில் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தங்கும் வசதி அளிக்கப்படும். நிதியுதவி செய்தவர்களுக்குத் தங்குவதற்கான கட்டணத்தில் சலுகை அளிக்கப்படும். நிதியுதவி செய்தவரின் பெயர் அல்லது நிதியுதவி செய்தவர்கள் கல்வி பயின்ற ஆண்டு அறைகளில் பொறிக்கப்படும். பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர்கள் அனைவரும், தங்கும் விடுதி கட்டுவதற்கு நிதியுதவி அளிக்கும்படி வேண்டப்படுகிறார்கள். மேலும், இது குறித்துப் பிரபலப்படுத்தும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். நிதியுதவியை “The Finance Officer, TANUVAS - Alumni House” என்ற பெயரில் வரையோலையாகவோ / காசோலையாகவோ எடுத்து, பொதுச் செயலாளர், பல்கலைக்கழக முன்னாள் மாணவர் சங்கம் மற்றும் பேராசிரியர், இறைச்சி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை – 600 007 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.